# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 75 /2016**

திரு. A. பாண்டியன்,
த/பெ G. ஆறுமுகம்,
எண்.390/2A, ஜம்மு வீதி,
பெரியார் நகர் தெற்கு,
விருத்தாச்சலம் . . . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

1) உதவி பொறியாளர்/இ&ப/நகரம்,
விருத்தாசலம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. விருத்தாசலம் துணைமின் நிலையம்,
பூதமூர், விருத்தாசலம் – 606 001.

2) செயற்பொறியாளர்/ இ&ப,
விருத்தாசலம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. விருத்தாசலம் துணைமின் நிலையம்,
பூதமூர், விருத்தாசலம் – 606 001.

3) உதவி செயற்பொறியாளர்/ இ&ப,
விருத்தாசலம்/நகரம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. விருத்தாசலம் துணைமின் நிலையம்,
பூதமூர், விருத்தாசலம் – 606 001. . . . . .. எதிர்மனுதாரர்கள்

**<u>ஆணை நாள் : 16–11–2016</u>**

1. திரு. A. பாண்டியன், த/பெ G. ஆறுமுகம், பெரியார் நகர் தெற்கு, விருத்தாச்சலம் அவர்களின் **23.9.2016** நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.75/2016ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர், மின்பாதை மற்றும் மின்கம்பம் மாற்றி அமைக்க காழ்ப்புணர்ச்சி காரணமாக மதிப்பீட்டு தொகை அதிகமாக தயாரிக்கப்பட்டு அவரிடம் **31.3.2016** அன்று ரூ.34,420/– வசூலிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால், TNERC விதிப்படி ரூ.23,640/– மட்டும் வசூலித்திருக்க வேண்டும் என்று தெரிவித்து அவரிடம் அதிகமாக வசூலிக்கப்பட்ட ரூ.10780/– மற்றும் இதற்குண்டான மனஉளச்சல் மற்றும் காலதாமதம் ஏற்படுத்தியதற்கும் மற்றும் இதர செலவுகளுக்கும் சேர்த்து அவருக்கு திரும்ப அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனு வின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று **29.9.2016** நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. எதிர்மனுதாரர்–1 செயற்பொறியாளர் / இ–ப / விருத்தாச்சலம் / பொறுப்பு அவர்கள் மேல்முறையீட்டாளருடன் **31.10.2016** அன்று உதவி செயற்பொறியாளர்/நகரம்/விருத்தாச்சலம் அவர்களின் அலுவலகத்தில் இசைவிணக்க பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றும் அந்த பேச்சுவார்த்தையில் எதிர்மனுதாரர்களால் அளிக்கப்பட்ட பதிலுரை மனநிறைவை தந்தது என்று தெரிவித்து அதனால் அவர் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்கிறேன் என கடிதம் மூலம் மேல்முறையீட்டாளர் ஒப்புதல் தந்துள்ளார் என்று தன்னுடைய **3.11.2016** நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும், இது சம்பந்தமாக மின்குறைதீர்ப்பாளருக்கு முகவரியிடப்பட்ட மேல்முறையீட்டாளரின் மனுவினையும் சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளர் தனது மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார் என்று எதிர்மனுதாரர்–1 தெரிவித்துள்ளதால் அந்த மனுவின் சம்பந்தப்பட்ட பத்திகள் மனுவிலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள தகவலின் அடிப்படையில் மேல்முறையீடு செய்து இருந்தேன். இந்நிலையில் மின்குறைதீர்ப்பாளர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று 31.10.2016 மனுதாரராகிய நான் மற்றும் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், நகரம், உதவி மின்பொறியாளர்/நகரம் விருத்தாசலம் ஆகியோர் முன்னிலையில் ஒத்திசைவு கலந்தாய்வு நடைபெற்றது. அதில் என்னால் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு எதிர்மனுதாரர்களின் பதிலுரை எனக்கு மனநிறைவு தந்ததால் எனது மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற இதன் மூலம் சம்மதிக்கிறேன்.*

*இப்படிக்கு*
*ஒப்பம்/xx xx xxx*
(A. *பாண்டியன்)"*

6. மேற்கண்ட மனுவில் மேல்முறையீட்டாளர், அவரால் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு எதிர்மனுதாரர்களின் பதிலுரை அவருக்கு மனநிறைவு தந்ததால் அவருடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற இதன் மூலம் சம்மதிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

7. மேல்முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெறுகிறேன் என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.75/2016 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. A. பாண்டியன்,
த/பெ G. ஆறுமுகம்,
எண்.390/2A, ஜம்மு வீதி,
பெரியார் நகர் தெற்கு,
விருத்தாச்சலம்

2)  உதவி பொறியாளர்/இ&ப/நகரம்,
விருத்தாசலம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. விருத்தாசலம் துணைமின் நிலையம்,
பூதமூர்,  விருத்தாசலம் – 606 001.

3) செயற்பொறியாளர்/ இ&ப,
விருத்தாசலம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. விருத்தாசலம் துணைமின் நிலையம்,
பூதமூர்,  விருத்தாசலம் – 606 001.

4) உதவி செயற்பொறியாளர்/ இ&ப,
விருத்தாசலம்/நகரம்,
கடலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 கே.வி. விருத்தாசலம் துணைமின் நிலையம்,
பூதமூர்,  விருத்தாசலம் – 606 001.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,  சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.